செ.வெ.எண்:36 நாள்:16.08.2017

## மாவட்டஆசிரியர் கல்விமற்றும் பயிற்சிநிறுவனம், மாயனுார், கரூர் மாவட்டம்

2017–18 ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்விபட்டயப் படிப்பில் சேர்வதற்கு ஒற்றைச்சாளர முறை கலந்தாய்வு மூலம் 07.08.2017 முதல் 09.08.2017 வரை சேர்க்கை நடைபெற்றதைதொடர்ந்து கிராமப்புறஏழைஎளியமக்களின் குழந்தைகள் பயன்பெறதக்க வகையில் மீளவும் ஒற்றைச்சாளர முறை கலந்தாய்வு 16.08.2017 முதல் 31.08.2017 வரை நடத்திட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சிமற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1153/இ2/2017, நாள்.11.08.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர்மாவட்டம், மாயனுார், மாவட்டஆசிரியர் கல்விமற்றும் பயிற்சிநிறுவனம் மற்றும் சின்னதாராபுரம், அரசுமகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்வதற்கு விருப்பம் மற்றும் தகுதியுள்ள மாணவர்கள் தங்களின் உண்மை சான்றிதழ்களுடன் மாயனுார், மாவட்ட ஆசிரியர் கல்விமற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு நேரில் வருகை புரிந்து உரியகட்டணத்தை செலுத்தி சேர்க்கை ஆணைபெறலாம் என தெரிவிக்கலாகிறது. சேர்க்கைக்காக நிறுவனத்திற்குவரும் மாணவர்களின் கல்வித் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு விண்ணப்பத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும், விண்ணப்பக் கட்டணம் மற்றும் சேர்க்கை கட்டணத்தினைசெலுத்திடவும் தேவையான வசதிகள் இந்நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கலாகிறது.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.